TNED140005192021

Presented on : 11-08-2021
Registered on : 11-08-2021
Decided on : 18-04-2026
Duration : 4 years, 8 months, 7 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 5ம் நாள்

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் சனிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.69/2021**

மாநில அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
ஆப்பக்கூடல் காவல் நிலையம்,
ஆப்பக்கூடல்.
(குற்ற எண். 310/2015). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. ரமேஷ்குமார் (30/2015),
த/பெ.தெய்வசிகாமணி.
2. மகேஷ் (35/2015),
த/பெ.மதேவப்பா.
3. தங்கராஜ் (52/2015),
த/பெ.சென்னியப்பன்.
4. சந்திரன் கே (61/2015) ,(இறந்துவிட்டார்)
த/பெ.குமாரசாமி.
5. பாலதண்டபானி (46/2015),(இறந்துவிட்டார்)
த/பெ.பழனிசாமி.
6. ராஜேந்திரன் (44/2015),
த/பெ.பாலன்.
7. ராஜாதெக்கன் (41/2015),
த/பெ.சாரமாமல்லன். ... எதிரிகள்

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>ஆப்பக்கூடல் காவல் நிலையம்,<br>ஆப்பக்கூடல்.<br>(குற்ற எண். 310/2015). |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:11:33 +0530

| | | |
|---|---|---|
| 2. | எதிரிகள் பெயர் | 1. ரமேஷ்குமார் (30),<br>த/பெ.தெய்வசிகாமணி.<br>2. மகேஷ் (35),<br>த/பெ.மதேவப்பா.<br>3. தங்கராஜ் (52),<br>த/பெ.சென்னியப்பன்.<br>4. சந்திரன் கே (61), (இறந்துவிட்டார்)<br>த/பெ.குமாரசாமி.<br>5. பாலதண்டபானி (46), (இறந்துவிட்டார்)<br>த/பெ.பழனிசாமி.<br>6. ராஜேந்திரன் (44),<br>த/பெ.பாலன்.<br>7. ராஜாதெக்கன் (41),<br>த/பெ.சாரமாமல்லன். |
| 3. | எதிரிகள் முகவரி | A1 –க.எண். 1/144–டீச்சர்ஸ் காலனி, மேட்டுபாளையம்.<br>A2. மல்லாங்குழி கிராமம், ஓங்கபுரம், தாளவாடி.<br>A3. க.எண்.30, காமராஜர் வீதி, கோலபள்ளூர், கோபி.<br>A6. க.எண்.35, தோட்டாச்சியம்மன் கோவில் வீதி, உதயம்பாளையம், கோவை.<br>A7. க.எண்.5/98–குந்தடா, கோத்தகிரி, தற்போது, 159 சென்றல் பிரிசன் குவார்ட்டர்ஸ், பாரதியார் சாலை, கோவை. |
| 4. | எதிரிகள் வயது | A1 - 30, A2 - 35, A3 – 61, A6 - 44, A7 - 41 |
| 5. | குற்ற நிகழ்வு நாள் | 11.12.2015 |
| 6. | புகார் தேதி | 11.12.2015 |
| 7. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி | A1 to A7 – 11.12.2015 |
| 8. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1, A2 – 05.01.2016, A3, A6 – 21.12.2015, A7 – 22.12.2015 |
| 9. | Commitment | N/A |
| 10. | கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | Bail Petition in Cmp 8111/2015 is allowed on 05.01.2016.<br>Bail Petition in Cmp 7873/2015 is allowed on 21.12.2015.<br>Bail Petition in Cmp 10082/2015 is dismissed on 11.12.2015. |



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:11:41 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | condition relaxation Petition in Cmp 1842/2017 is dismissed on 11.05.2017.<br>Return of Property petiton in Cmp 353/2016 is allowed on 20.01.2026.<br>Return of Property petiton in Cmp 85/2016 is allowed on 12.01.2016.<br>Return of Property petiton in cmp 571/2021 is Dismissed on 8.03.2021.<br>U/s.239 Cr.PC petition in Crl.MP No.2936/2022 in CC.No.69/2021 stands dismissed on 28.03.2023 on the file of this Court.<br>U/s.482 Cr.PC petition in Crl.OP.No.13918/2024 and Crl.MP.no.8465/2024 is dismissed on Dt.01.08.2024 on the file of the Hon'ble High Court of Madras.<br>U/s.482 Cr.PC petition in Crl.OP.No.25008/2021 and Crl.OP.no.15622 & 15623 / 2022 is dismissed on Dt.17.10.2024 on the file of the Hon'ble High Court of Madras. | | |
| 11. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 12.04.2022, 20.08.2025 | 12.04.2022, 20.08.2025 |
| | | அ.சா.2 | 25.08.2025 | 25.08.2025 |
| | | அ.சா.3 | 26.08.2025 | 26.08.2025 |
| | | அ.சா.4 | 26.08.2025 | 26.08.2025 |
| | | அ.சா.5 | 09.09.2025 | 09.09.2025 |
| | | அ.சா.6 | 10.09.2025 | 10.09.2025 |
| | | அ.சா.7 | 15.10.2025 | 15.10.2025 |
| | | அ.சா.8 | 29.10.2025 | 29.10.2025 |
| | | அ.சா.9 | 10.11.2025 | 10.11.2025 |
| | | அ.சா.10 | 17.02.2026 | 17.02.2026 |
| | | அ.சா.11 | 24.02.2026 | 24.02.2026 |
| 12. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 26.02.2026 | | |
| 13. | தண்டனை அல்லது உத்தரவு | 18.04.2026 | | |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:11:44 +0530

| | | |
|---|---|---|
| 14 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 18.04.2026 |
| 15 | காலதாமதத்திற்கான காரணம் | அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம் |

இவ்வழக்கு கடந்த 11.08.2021ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், 1, 2, எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. B.மோகன் மற்றும் M.பாலமுருகன் அவர்களும், 3, 6, 7, எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.விஜயகுமார் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

1, 2ம் எதிரிகள், கடந்த 2015 வருடம் செப்டம்பர் மாதத்தில் சாட்சி.1 ஜெயக்குமார் என்பவரை அணுகி தங்களுக்கு தெரிந்தவரிடம் இருடியம் உலோகப்பொருள் இருப்பதாகவும் அந்த பொருளை விற்பனை செய்து கொடுத்தால் நல்ல கமிஷன் தருவதாகவும், அந்த பொருளை காட்டவேண்டும் என்றால் ரூ.50 லட்சம் எதிரிகளுக்கு தர வேண்டும் என்று ஆசை வார்த்தைகளை சாட்சி.1யிடம் கூறியுள்ளார்கள் என்றும், அதனை உண்மை என்று நம்பி சாட்சி.1, 1, 2 எதிரிகள் தெரிவித்த கம்பெனி மற்றும் வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பும்படி சொன்னதன் பேரில் 07.09.2015ம் தேதியில் கோவையிலுள்ள சாட்சி.1ன் CITI BANK A/c No.5014128427லிருந்து டெல்லியில் உள்ள ICICI BANK A/c No.039605001949 எண்ணிற்கு KIAN FIN SERVICE PRT LIMITED கம்பெனிக்கு ரூ.25,00,000/-மும் அதே கம்பெனிக்கு அதே நாளில் கரூர் வைஸ்யா வங்கியில் உள்ள சாட்சி.2ன் கணக்கு எண்.1121155000028616லிருந்து ரூ.20,00000/-மும் மொத்தம் ரூ.45,00000/- பணத்தை அந்த கம்பெனிக்கு அனுப்பியுள்ளார்கள் என்றும், ஆனால், 1, 2 எதிரிகள், சாட்சி.1க்கு காட்டுவதாக சொல்லிய இருடியத்தை காட்டாமல், ரூ.45,00,000/- பணத்தை நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றியுள்ளார்கள் என்றும், மேலும், 11.12.2015ம் தேதியில் மதியம் 14.00 மணிக்கு, ஆப்பக்கூடல் காவல்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:12:26 +0530

நிலைய எல்லைக்குட்பட்ட அத்தாணி, செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள, தேவன் என்பவரின் தோட்டத்திற்கு, சாட்சி.1 அவரது தம்பி ரவிக்குமார் மற்றும் சாட்சியின் நண்பரான ரங்கநாதன் ஆகியோர்கள் சாட்சி.3 ரங்கநாதனின் BOLERO TN 36 AR 2918 என்ற காரில் சென்றுள்ளார் என்றும், அப்போது, அங்கு TN 37 BJ 2273 எண் உள்ள SWIFT காரிலும், TN 36 P 8428 என்ற எண் உள்ள FORD FIGO காரிலும், கலகம் செய்யும் நோக்கத்துடன் சட்ட விரோதமாக 1 முதல் 7 வரையிலான எதிரிகள் ஒன்று சேர்ந்து வந்துள்ளார்கள் என்றும், 1, 2 எதிரிகளிடம், சாட்சி.1, பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டதற்கு 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சாட்சி.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து ஏன்டா தேவுடியா பசங்களா, கண்டாரோலி பசங்களா நீங்க என்ன பெரிய புடுங்கிகளா என்று சொல்லியும், நீ அனுப்பிய பணத்தையெல்லாம் தரமுடியாது என்று பொது இடத்தில் தகாத வார்த்தைகளால் சாட்சி.1யை இழிவு படுத்தி பேசியுள்ளார்கள் என்றும், 1, 2 எதிரிகளிடம், சாட்சி.1, பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டுள்ளார் என்றும், அதற்கு 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சாட்சி.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து, இனிமேல் எங்களிடம் பணம் கேட்டீங்கன்னா நீங்கள் கோயமுத்தூருக்கு உயிரோடு போகமாட்டீங்க என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் என்றும், எனவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 406, 420, 147, 294(b), 506(i)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, ஆப்பக்கூடல் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், 1, 2 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 406, 420ன் கீழும், 1 முதல் 7 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 147ன் கீழும், 1 முதல் 7 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 294(b), 506(i)ன் கீழும் குற்றச்சாட்டினை வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்கள்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:12:30 +0530

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையான சான்றுப்பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

1, 2ம் எதிரிகள், கடந்த 2015 வருடம் செப்டம்பர் மாதத்தில் சாட்சி.1 ஜெயக்குமார் என்பவரை அணுகி தங்களுக்கு தெரிந்தவரிடம் இருடியம் உலோகப்பொருள் இருப்பதாகவும் அந்த பொருளை விற்பனை செய்து கொடுத்தால் நல்ல கமிஷன் தருவதாகவும், அந்த பொருளை காட்டவேண்டும் என்றால் ரூ.50 லட்சம் எதிரிகளுக்கு தர வேண்டும் என்று ஆசை வார்த்தைகளை சாட்சி.1யிடம் கூறியுள்ளார்கள் என்றும், அதனை உண்மை என்று நம்பி சாட்சி.1, 1, 2 எதிரிகள் தெரிவித்த கம்பெனி மற்றும் வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பும்படி சொன்னதன் பேரில் 07.09.2015ம் தேதியில் கோவையிலுள்ள சாட்சி.1ன் CITI BANK A/c No.5014128427லிருந்து டெல்லியில் உள்ள ICICI BANK A/c No.039605001949 எண்ணிற்கு KIAN FIN SERVICE PRT LIMITED கம்பெனிக்கு ரூ.25,00,000/–மும் அதே கம்பெனிக்கு அதே நாளில் கரூர் வைஸ்யா வங்கியில் உள்ள சாட்சி.2ன் கணக்கு எண்1121155000028616லிருந்து ரூ.20,00000/–மும் மொத்தம் ரூ.45,00000/– பணத்தை அந்த கம்பெனிக்கு அனுப்பியுள்ளார்கள் என்றும், ஆனால், 1, 2 எதிரிகள், சாட்சி.1க்கு காட்டுவதாக சொல்லிய இருடியத்தை காட்டாமல், ரூ.45,00,000/– பணத்தை நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றியுள்ளார்கள் என்றும், மேலும், 11.12.2015ம் தேதியில் மதியம் 14.00 மணிக்கு, ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அத்தாணி, செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள, தேவன் என்பவரின் தோட்டத்திற்கு, சாட்சி.1 அவரது தம்பி ரவிக்குமார் மற்றும் சாட்சியின் நண்பரான ரங்கநாதன் ஆகியோர்கள் சாட்சி.3 ரங்கநாதனின் BOLERO TN 36 AR 2918 என்ற காரில் சென்றுள்ளார் என்றும், அப்போது, அங்கு TN 37 BJ 2273 எண் உள்ள SWIFT காரிலும், TN 36 P 8428 என்ற எண் உள்ள FORD FIGO காரிலும், கலகம் செய்யும் நோக்கத்துடன் சட்ட விரோதமாக 1 முதல் 7 வரையிலான எதிரிகள் ஒன்று சேர்ந்து



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:12:35 +0530

வந்துள்ளார்கள் என்றும், 1, 2 எதிரிகளிடம், சாட்சி.1, பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டதற்கு 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சாட்சி.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து ஏன்டா தேவுடியா பசங்களா, கண்டாரோலி பசங்களா நீங்க என்ன பெரிய புடுங்கிகளா என்று சொல்லியும், நீ அனுப்பிய பணத்தையெல்லாம் தரமுடியாது என்று பொது இடத்தில் தகாத வார்த்தைகளால் சாட்சி.1யை இழிவு படுத்தி பேசியுள்ளார்கள் என்றும், 1, 2 எதிரிகளிடம், சாட்சி.1, பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டுள்ளார் என்றும், அதற்கு 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சாட்சி.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து, இனிமேல் எங்களிடம் பணம் கேட்டீங்கன்னா நீங்கள் கோயமுத்தூருக்கு உயிரோடு போகமாட்டீங்க என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

4.2 அ.சா.9 அம்பிகா உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது கடந்த 11.12.2015ம் தேதி ஜெயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 310/ 2015 இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 506(i), 406, 420 ஆகிய பிரிவுகளின் கீழ் அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்காவணங்களை நிலைய ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களின் பார்வைக்கு புலன்விசாரணைக்காக ஒப்படைத்துள்ளார்.

4.3 கடந்த 11.12.2015 ம் தேதி அ.சா.10 ரமேஷ் பவானி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, ஆப்பக்கூடல் காவல் உதவி ஆய்வாளர் அம்பிகா முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணைக்காக தன்னிடம் ஒப்படைத்த ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.310/2015, சட்டப்பிரிவுகள் 147, 294(b), 506(1), 406, 420 IPC வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், மேற்படி வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்ட தான் வழக்கின் சம்பவ இடமான அத்தாணி, செம்புலிச்சம்பாளையம், தேவர் தோட்டம் சென்று பார்க்க, வழக்கின் சாட்சியும் வாதியும் ஆன ஜெயக்குமார் எதிரிகளை அடையாளம் காட்ட 1ம் எதிரி ரமேஷ் குமார், மகேஷ், தங்கராஜ், சந்திரன், பாலதண்டபாணி ராஜேந்திரன் மற்றும் ராஜா தெக்கன் ஆகியோர்களை காவல் படுத்தி தக்க பாதுகாப்பில் வைத்து சம்பவ இடத்தை ஆஜர்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:12:38 +0530

சாட்சிகள் சத்தியசீலன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.9 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

4.4 ஆஜர் சாட்சிகளான ஜெயக்குமார், ரங்கநாதன், ரவிக்குமார், சத்தியசீலன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சாட்சிகளின் விசாரணையில் இருந்தும், தன்னுடைய தனிப்பட்ட விசாரணையில் இருந்தும் சம்பவம் நடைபெற்றது உண்மை எனத் தெரிய வந்ததால், மேற்படி எதிரிகளை கைது செய்வதற்கான காரணம் கூறி முறைப்படி இரவு 19.00 மணிக்கு கைது செய்தும், எதிரி ரமேஷ் குமாரிடமிருந்து TN 37 BJ 2273 Swift Carமற்றும் மேற்படிசாட்சிகள் என்ற வெள்ளை நிற பணம் ரூ.23000/– ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் முன்னிலையில் கைப்பற்றியும், எதிரி சந்திரன் என்பவரிடமிருந்து TN 36 P 8428 என்ற சில்வர் கலர் Ford Carயை அதே சாட்சிகள் கைப்பற்றினேன். முன்னிலையில் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் தடையை மகசர்மூலம் சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளை தக்க காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும்,

4.5 வழக்கில் கைப்பற்றப்பட்ட தடையைச் சொத்துக்களை அ.சா.ஆ.10 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், TN 37 BJ 2273 Swift Car அ.சா.பொ.2 ஆகவும், TN 36 P 8428 சில்வர் கலர் Ford Car புகைப்படத்தின் வழியாக அ.சா.பொ.3 ஆகவும் ( புகைப்படம் 5 எண்ணிக்கை) குறியிடு செய்யப்பட்டும், 31.12.2015 ம் தேதி வாதி ஜெயக்குமாரின் வங்கி கணக்கு விவரம் கேட்டு கோவை சிட்டி யூனியன் வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பிறகு 22.12.2015 ம் தேதியில் சாட்சி துளசிதாஸ்–ன் வங்கி கணக்கு கேட்டு கரூர் வைசியா வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பிறகு 19.03.2016 ம் தேதி Kian Fin Service Private Limited நிறுவனத்தின் வங்கி விவரம் கேட்டு, கோவை கரூர் வைசியா வங்கி கிளையில், வேண்டுகோள் கடிதம் வைத்தும், தான் பணி மாறுதல் காரணமாக வழக்கு கோப்பினை பவானி வட்ட காவல் ஆய்வாளர் திரு.இளங்கோ என்பவரிடம் ஒப்படைத்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:12:41 +0530

4.6 பின்னர், கடந்த 02.12.2020ம் ஆண்டு அ.சா.11 தேவேந்திரன் காவல் ஆய்வாளர் இந்த வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கோப்புகளை பெற்று சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்ததிலும், காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவரிடம் கூறியதையே தன்னிடம் கூறியதால் தான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர், சிட்டி பேங்க் branch, Operator Service Head பானு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அவர் வாதி ஜெயக்குமார் என்பவரின் வங்கி பரிவர்தனை கணக்கு விவரங்களை தனக்கு கொடுத்தார் என்றும், அதனை பெற்று தாக்கல் செய்தும், ஜெயகுமாரின் வங்கி கணக்கு பரிவந்தனை எண். 05014128427 கணக்கின் 2015ம் வருடம் செப்டம்பர் மாதத்தின் வரவு செலவு அறிக்கை பெற்று தாக்கல் செய்ததாகவும், 02.12.2020 சென்னை கரூர் வைசியா வங்கி துணை மேலாளர் கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், துளசிதாஸ் என்பவரின் கரூர் வைசியா வங்கி கணக்கு எண்.1121155000028616 கணக்கின் 2015ம் வருடத்தின் வரவு செலவு அறிக்கை பெற்று தாக்கல் செய்ததாகவும், பின்னர், அன்றைய தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அம்பிகா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 147, 506(i), 406, 420ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிகளை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்று கூறினார்கள் இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார்கள். எதிரிகள் பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்கள்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 406, 420, 147, 294(b), 506(i)ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:12:43 +0530

7. **தீர்வு**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் 1, 2ம் எதிரிகள், கடந்த 2015 வருடம் செப்டம்பர் மாதத்தில் சாட்சி.1 ஜெயக்குமார் என்பவரை அணுகி தங்களுக்கு தெரிந்தவரிடம் இருடியம் உலோகப்பொருள் இருப்பதாகவும் அந்த பொருளை விற்பனை செய்து கொடுத்தால் நல்ல கமிஷன் தருவதாகவும், அந்த பொருளை காட்டவேண்டும் என்றால் ரூ.50 லட்சம் எதிரிகளுக்கு தர வேண்டும் என்று ஆசை வார்த்தைகளை சாட்சி.1யிடம் கூறியுள்ளார்கள் என்றும், அதனை உண்மை என்று நம்பி சாட்சி.1, 1, 2 எதிரிகள் தெரிவித்த கம்பெனி மற்றும் வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பும்படி சொன்னதன் பேரில் 07.09.2015ம் தேதியில் கோவையிலுள்ள சாட்சி.1ன் CITI BANK A/c No.5014128427லிருந்து டெல்லியில் உள்ள ICICI BANK A/c No.03960501949 எண்ணிற்கு KIAN FIN SERVICE PRT LIMITED கம்பெனிக்கு ரூ.25,00,000/—மும் அதே கம்பெனிக்கு அதே நாளில் கரூர் வைஸ்யா வங்கியில் உள்ள சாட்சி.2ன் கணக்கு எண்1121155000028616லிருந்து ரூ.20,00000/—மும் மொத்தம் ரூ.45,00000/— பணத்தை அந்த கம்பெனிக்கு அனுப்பியுள்ளார்கள் என்றும், ஆனால், 1, 2 எதிரிகள், சாட்சி.1க்கு காட்டுவதாக சொல்லிய இருடியத்தை காட்டாமல், ரூ.45,00,000/— பணத்தை நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றியுள்ளார்கள் என்றும், மேலும், 11.12.2015ம் தேதியில் மதியம் 14.00 மணிக்கு, ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அத்தாணி, செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள, தேவன் என்பவரின் தோட்டத்திற்கு, சாட்சி.1 அவரது தம்பி ரவிக்குமார் மற்றும் சாட்சியின் நண்பரான ரங்கநாதன் ஆகியோர்கள் சாட்சி.3 ரங்கநாதனின் BOLERO TN 36 AR 2918 என்ற காரில் சென்றுள்ளார் என்றும், அப்போது, அங்கு TN 37 BJ 2273 எண் உள்ள SWIFT காரிலும், TN 36 P 8428 என்ற எண் உள்ள FORD FIGO காரிலும், கலகம் செய்யும் நோக்கத்துடன் சட்ட விரோதமாக 1 முதல் 7 வரையிலான எதிரிகள் ஒன்று சேர்ந்து வந்துள்ளார்கள் என்றும், 1, 2 எதிரிகளிடம், சாட்சி.1, பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டதற்கு 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சாட்சி.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து ஏன்டா தேவுடியா பசங்களா, கண்டாரோலி பசங்களா நீங்க என்ன பெரிய புடுங்கிகளா என்று சொல்லியும், நீ அனுப்பிய பணத்தையெல்லாம் தரமுடியாது என்று பொது இடத்தில் தகாத வார்த்தைகளால் சாட்சி.1யை இழிவு படுத்தி பேசியுள்ளார்கள் என்றும்,



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:12:47 +0530

1, 2 எதிரிகளிடம், சாட்சி.1, பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டுள்ளார் என்றும், அதற்கு 1 முதல் 7 வரையிலான எதிரிகள் சாட்சி.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து, இனிமேல் எங்களிடம் பணம் கேட்டீங்கன்னா நீங்கள் கோயமுத்தூருக்கு உயிரோடு போகமாட்டீங்க என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் என்று சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகள்யை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

8. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்றுகூடி சாட்சிகளை தகாத வார்த்தையால் பேசவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ, ஏமாற்றவோ இல்லை என்றும், ஆகவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதம் புரிந்தார்.

9. இவ்வழக்கில் அ.சா.1 ஜெயகுமார் புகார்தாரராகவும், அ.சா.2 ரவிகுமார் கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.3 ரங்கநாதன், அ.சா.4 துளசிதாஸ் கேள்விப்பட்ட சாட்சியாகவும், அ.சா.5 சத்தியசீலன் மற்றும் அ.சா.6 செந்தில்குமார் பார்வை மகஜர் சாட்சிகளாகவும், அ.சா.7 கிருஷ்ணன், அ.சா.8 பானு ஆகியோர் வங்கி கணக்கு சம்பந்தமாக அறிக்கை வழங்கிய சாட்சிகளாகவும், அ.சா.9 அம்பிகா முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரியாகவும், அ.சா.10 ரமேஷ் மற்றும் அ.சா.11 தேவேந்திரன் புலன்விசாரணை அதிகாரிகளாக அரசு தரப்பில் முன்னிலை படுத்தப்பட்டுள்ளார்கள்.

**10. <u>எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 406, 420ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**இ.த.ச பிரிவு 406 என்பது** "குற்றவியல் நம்பிக்கை மீறல்" (Criminal Breach of Trust) க்கான தண்டனையைக் கூறுகிறது. நம்பி ஒப்படைக்கப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் கையாளுதல் அல்லது சொந்தப் பயன்பாட்டிற்கு மாற்றுதல்



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:12:50 +0530

போன்ற செயல்களுக்கு, 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

**இ.த.ச பிரிவு 420 என்பது** ஒருவரை ஏமாற்றி, நேர்மையற்ற முறையில் சொத்து, பணம் அல்லது மதிப்புமிக்க பத்திரங்களைப் பறிக்கும் மோசடி குற்றத்தைக் குறிக்கிறது. இது மோசடி செய்பவருக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கக்கூடியது ஆகும்.

10.1 மேற்படி பிரிவின்படி பரிசீலனை செய்கையில் வழக்கிற்கு அடிப்படையான புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் தனது புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புகார்வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

ஆனால், அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"புகாரை நான் எழுதவில்லை என்றால், சரியல்ல. நான் தான் எழுதினேன். நான் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். நான் மேல் நடவடிக்கை வேண்டி தாக்கல் செய்த மனுவில் போலீசார் என்னிடம் 4-5 வெள்ளை தாள்களில் கையெழுத்து வாங்கிவிட்டு என்னையும், எனது தம்பி ரவிக்குமாரையும் அங்கிருந்து அனுப்பிவிட்டு மற்றவர்களை விசாரித்துவிட்டு அனுப்புவதாக கூறியதாக எனது மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்"*** என சாட்சியமளித்துள்ளார்.

10.2 மேலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.9 அம்பிகா தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்

***புகார்தாரர் புகாரை காவல் நிலையத்தில் கொடுக்கும் போது அவர் எழுதி தான் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.***



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:12:54 +0530

10.3 மேற்படி சாட்சியத்திலிருந்து பரிசிலனை செய்கையில் புகார்தாரர் தான் புகாரை எழுதினார் என சாட்சியம் அளித்துவிட்டு, இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டி தாக்கல் செய்த மனுவில் போலீசார் 4–5 தாள்களில் கையொப்பத்தை வாங்கினார்கள் என குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்திருப்பதும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.9 அம்பிகா புகாரை புகார்தாரர்தான் எழுதிகொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் என சாட்சியமளித்துள்ளார் என்பதும், அ.சா.1 சாட்சியமும் அ.சா.9 சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்பதும், வழக்கிற்கு அடிப்படையான புகாரை புகார்தாரர் தான் எழுதினாரா அல்லது புகாரில் கூறியுள்ளபடிதான் சம்பவம் நடைபெற்றதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.

10.4 1 மற்றும் 2ம் எதிரிகள் புகார்தாரரை ஏமாற்றி நேர்மையற்ற முறையில் சொத்து, பணம் அல்லது மதிப்புமிக்க பத்திரங்களைப் பறிக்கும் மோசடி குற்றம் செய்தார்களா என பரிசிலனை செய்கையில்,

அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "எதிரிகள் இருவரும் இரிடியம் பொருளை நீங்கள் பார்க்கவேண்டும் என்றால் நாங்கள் சொல்லும் வங்கி கணக்கிற்கு நீங்கள் ரூ.50 இலட்சம் பணம் கட்டவேண்டும் என்று கூறினார்கள். பிறகு நாங்கள் பணம்ஏற்பாடு செய்துவிட்டு, 07.09.15அன்று என்னுடைய வங்கி சிட்டி வங்கியிலிருந்து ரூ.25இலட்சம் பணத்தை டெல்லியில் உள்ள Kianfin Services என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு அனுப்பிவைத்தேன். அந்த பணத்தை அனுப்பும்போது, மேற்கண்ட எதிரிகள் இருவரும் என்னுடன் எனது வங்கிக்கு வந்தனர். அதே நாளில் துளசிதாஸ் வங்கியான கோவை கரூர் வைஸ்யா வங்கியில் இருந்து ரூ.20இலட்சத்தை மேற்படி டெல்லியில் உள்ள Kianfin Services என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு அனுப்பிவைத்தார்" என்று சாட்சியமளித்துள்ளார்.

ஆனால், அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***நான் எனது முதல் விசாரணையில் 09/09/2015 ஆம் தேதி மேட்டுப்பாளையத்தில் உள்ள காய்கறி மார்க்கெட் அருகில் வந்தால் இரிடியம் பொருட்களை காண்பிப்பதாக கூறினார்கள்***



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:12:56 +0530

***என்றும் 09/09/ 2015 ஆம் ஆண்டு காலை நானும், ரவிக்குமார், துளசிதாஸ், ரங்கநாதன் மற்றும் சந்திரமோகன் தந்தை ஆகியோர்கள் எதிரிகள் கூறியவாறு மேட்டுப்பாளையம் காய்கறி மார்க்கெட் அருகில் சென்றோம் என்றும், அங்கிருந்த எதிரிகள் வாங்க காட்டுகிறோம் என்று கூறி சிறிது தூரம் எங்களை நடக்க வைத்து விட்டு எதிரிகள் அங்கிருந்து தப்பித்து விட்டனர். அது குறித்து நான் காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால், சரிதான்*** என சாட்சியமளித்துள்ளார்.

மேலும், அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***அவர் ரியல் எஸ்டேட் தொழில் காரணமாக வரவில்லை. 07/09/2015 ஆம் தேதி Kian Fin Services பணம் அனுப்பியது தொடர்பாக இந்த வழக்கிற்கு முன்பு நானும், துளசிதாசும் எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால், சரிதான்*** என சாட்சியமளித்துள்ளார்.

10.5 மேற்படி குறுக்கு விசாரனை சாட்சியத்திலிருந்து எதிரிகள் இருடியம் பொருட்களை காட்டுவதாக கூறப்பட்ட தினத்தில் எதிரிகள் அங்கிருந்து தப்பித்து விட்டனர் என்பதும், அதுகுறித்து அன்றைய தினமே புகார்தாரர் மற்றும் அவரது நண்பர் துளசிதாஸ் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10.6 மேலும் அ.சா.1 தனது முதல் விசாரணையில் பணத்தை அனுப்பும்போது, மேற்கண்ட எதிரிகள் இருவரும் என்னுடன் எனது வங்கிக்கு வந்தனர் என சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் அ.சா.1 உடன் வங்கிக்கு சென்றார்களா என பரிசீலனை செய்கையில்,

அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***நான் பணத்தை Kian Fin Services எந்த வங்கி கணக்கில் இருந்து அனுப்பினேன் என்றால், எனது சிட்டி வங்கியிலிருந்து அனுப்பினேன். மேற்படி சிட்டி வங்கியில் CCTV கேமராக்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சிட்டி வங்கிக்கு என்னுடன் எதிரிகள் வந்திருந்தால் CCTV கேமராவில் பதிவாகியிருக்கும் என்றால், சரிதான்*** என சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:00 +0530

10.7 மேற்படி அ.சா.1 சாட்சியத்திற்க்கு மாறாக

| |
|---|
| அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"நான் முதல் விசாரணையில் என்னுடன் 2 நபர்கள் வந்தார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரிதான். நான் புகாரில் என்னுடன் வங்கிக்கு 2 நபர்கள் வந்தார்கள் என்று புகாரில் கூறியுள்ளது தவறு என்றால், சரிதான்"*** என சாட்சியமளித்துள்ளார். |

10.8 மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்

| |
|---|
| ***நான் கூறுவது தவறு என்றாலும் 07.09.2015 ஆம் தேதி 1 மற்றும் 2 எதிரிகள் என்னுடன் சேர்ந்து சிட்டி வங்கிக்கு வந்தார்கள் என்று கூறுவது தவறு என்றால், சரியல்ல. மகேஷ் என்ற எதிரி என்னுடன் வந்தார். நான் எனது போலீஸ் விசாரணையின்போது மகேஷ் தான் என்னுடன் வந்தார் என்று கூறினேன் என்றால் கூறினேன்"*** என சாட்சியமளித்துள்ளார். |

10.9 மேற்படி அ.சா.1 சாட்சியத்திற்கு மாறாக

| |
|---|
| அ.சா.8 பானு தனது குறுக்கு விசாரனை சாட்சியத்தில் |
| ***போலிசார் எங்களிடம் கேட்ட வேண்டுகோள் கடிதத்தில் நான் ஜெயக்குமார் எனது வங்கிக்குக் நேரடியாக வந்து சலான் மூலம் பரிவர்த்தனை செய்யவில்லை என்றும் அவரது எனது வங்கிக்கு நேரடியாக வரவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதனால் CCTV பதிவுகள் இல்லை என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்*** என சாட்சியம் அளித்துள்ளார். |

10.10 மேற்படி அ.சா.8 சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக வழக்கின் புலன் விசாரனை அதிகாரி அ.சா.11 தேவேந்திரன் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

| |
|---|
| ***சிட்டி யூனியன் வங்கியில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் We wish to inform your good office that the transactions listed in your aforesaid notice are online fund transfers. Hence, there is no physical challan/CCTV footage available for the same என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்*** என சாட்சியம் அளித்துள்ளார். |



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:02 +0530

10.11 மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.1 சாட்சியம் அளித்திருப்பது போல் அ.சா.1 உடன் எதிரிகள் வங்கிக்கு சென்றிருந்தால் அவர்கள் வந்தது தொடர்பாக ஏதாவது CCTV பதிவுகள் இருந்திருக்கும். மேலும் அ.சா.8 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஜெயக்குமார் அவரது இணையதள வங்கியிலிருந்து மாற்றி உள்ளார் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.1 வங்கிக்கு செல்லவில்லை என்பதும், வங்கியில் CCTV பதிவுகள் இல்லை என்பதும், அ.சா.1 தனது இணையதள வங்கி மூலம் கியான்பின் சர்வீஸ்க்கு பணத்தை அனுப்பியுள்ளார் என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10.12 மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் 1 மற்றும் 2ம் எதிரிகள் சொல்லிதான் டெல்லியில் உள்ள கியான்பின் சர்வீஸ் நிறுவனத்திற்காக பணம் அனுப்பியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தினை பரிசிலனை செய்கையில்,

| |
|---|
| மேலும், அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"Kian Fin Services டெல்லியில் செயல்படும் நிறுவனம் என்றால், சரிதான். அது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால், சரிதான். மேற்படிKian Fin Services நிறுவனத்திற்கு முகவரி உள்ளது என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரிகள் சொல்லித்தான் நான் Kian Fin Services பணம் அனுப்பினேன் என்று கூறுவது தவறு என்றாலும், சரியல்ல.*** |

10.13 அ.சா.2 ரவிக்குமார் தனது சாட்சியத்தில், தான் கோயம்புத்தூர் அவிநாசி சாலை டாக்டர் ஜெகநாதன் நகரில் குடியிருந்து கொண்டு டெக்ஸ்டைல் மிஷினரி ஏற்றுமதி இற்குமதி தொழில் செய்து வருவதாகவும், அ.சா.1 ஜெயக்குமார் தனது சகோதரர் என்றும், பட்டியல் சாட்சி.4 துளசிதாஸ் தனது சகோதரர் ஜெயக்குமாரின் நண்பர் என்றும், அவரிடம் இரிடியம் உள்ளது என்றும், அதை வாங்கினால் நிறைய பணம் கிடைக்கும் என்று கூறி தனது சகோதரரிடம் கூறினார் என்றும், தனது சகோதரர் ஜெயகுமார் இரிடியம் வாங்குவதற்காக எதிரிகள் ரமேஷ் ரூ.25,00,000/- பணமும், பட்டியல் சாட்சி.4 துளிசதாஸ் அவரது வங்கியான கோயம்புத்தூர் கரூர் வைஸ்யா வங்கியிலிருந்து எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமார் ஆகியோர்களுக்கு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:05 +0530

ரூ.20,00,000/- பணமும் அனுப்பி இருந்தார்கள் என்றும், மேற்படி பணமானது ரமேஷ் குமார் மற்றும் மகேஷ்குமார் சொன்ன வங்கி கணக்கிற்கு தங்களுக்கு அவர்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டதாக தனது சகோதரர் கூறினார் என்றும், அதன்படி எதிரிகள் இருவரும் தனது சகோதரருக்கும், தளசிதாசிற்கும் இரிடியத்தை காட்டவும் அல்லது அந்த பணத்தை திருப்பித் தரவும் முன்வரவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

10.14 மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், பின்னர் கடந்த 11/12/2015ம் தேதியன்று எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரும் செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள தேவன் தோட்டத்தில் இருப்பதாக தனது சகோதரர் ஜெயகுமாருக்கு தகவல் வந்ததாக தன்னிடம் கூறினார் என்றும், தனக்கு சகோதரர் தன்னிடம் செம்புளிச்சாம்பாளையம் வருமாறு கூறியதன் பேரில் தான் ஜெயக்குமார் ரங்கநாதன், பாலதண்டபாணி, ராஜேந்திரன் மற்றும் ராஜா தெக்கன் ஆகியோர்கள் செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள தேவன் தோட்டத்திற்கு வந்தபோது, அங்கிருந்த எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமாரிடம் ஜெயக்குமார் தாங்கள் கொடுத்த பணத்தை கொடுங்கள் அல்லது நீங்கள் கூறியவாறு இரிடியத்தை கொடுங்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் ரமேஷ்குமார் மற்றம் மகேஷ்குமார் ஒழுக்கமாக போய் சேர முடியாது பாத்துக்கோங்க என்று தங்களை மிரட்டினார்கள் என்றும், பின்னர், தானும், தனது சகோதரர் ஜெயக்குமார் மற்றும் தங்களுடன் கோயம்புத்தூரில் இருந்த வந்த மற்ற 4-5 நபர்கள் சென்று ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தோம் என்றும், பின்னர், ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எதரிகள் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில், ***சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், துளசிதாஸ் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றும், எனது அண்ணன் பணம் அனுப்பிய சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான் என்றும், துளசிதாஸ் பணம் அனுப்பியது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்*** என சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:07 +0530

10.15 அ.சா.3 ரங்கநாதன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், அ.சா.1 ஜெயக்குமார் தனது நண்பர் என்றும் கடந்த 11.12.2015ம் தேதியன்று ஜெயக்குமார் தன்னிடம் வந்து இரிடியம் பொருள் வாங்குவதற்காக தன்னுடன் ஈரோடு வருமாறு தன்னை அழைத்தார் என்றும், அப்போது, ஜெயக்குமார் தன்னிடம் தான் ரூ.25,00,000/- பணமும், தனது நண்பர் துளசிதாஸ் ரூ.20,00,000/- பணமும் எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ்குமாரிடம் கொடுத்து தாங்கள் ஏமாந்துவிட்டதாக தன்னிடம் கூறினார் என்றும், எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமாரிடம் கொடுத்து தாங்கள் ஏமாந்து விட்டதாக தன்னிடம் கூறியதாகவும், மேற்படி எதிரிகள் இருவரும் அத்தாணி, தேவன் தோட்டத்தில் இருப்பதாகவும், அவர்களை பார்ப்பதற்காக தன்னுடன் வருமாறும் ஜெயக்குமார் தன்னிடம் கூறினார் என்றும், தான் தனது வண்டியில் ஜெயக்குமார், ரவிகுமார், பாலதண்டாயுதபாணி, ராஜேந்திரன் மற்றும் ராஜா தெக்கன் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு கோவையிலிருந்து தேவன் தோட்டத்திற்கு வந்தபோது, மேற்படி எதிரிகள் இருவரும் அங்கு இருந்தார்கள் என்றும், அவர்களுடன் சில ஆட்களும் இருந்தார்கள் என்றும், ஜெயகுமார், ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமாரிடம் தங்களது பணத்தை கொடுங்கள் இல்லாவிட்டால் பொருளை கொடுங்கள் என்று கேட்டபோது, மேற்படி எதிரிகள் இருவரும் பொருளும், பணமும் கொடுக்க முடியாது என்று உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள் என்றும் கூறி தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், பின்னர், தானும் தன்னுடன் வந்த மற்ற 6 நபர்களும் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எதிரிகளை தங்களை அடையாளம் காட்டுமாறு கூறினார்கள் என்றும், தாங்களும் போலீசாரை தேவன் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அவர்களை அடையாளம் காட்டிய பின்னர், ஜெயகுமார் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.3 அவரது குறுக்கு விசாரணையில், ஜெயகுமாருக்கும், ***"எதிரிக்கும் உள்ள வரவு செலவு குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும், நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்தில் எதிரிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பே போலீசார் எதிரிகளை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். விசாரித்து***



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:11 +0530

***முடித்துவிட்டுதான் ஜெயகுமாரிடம் புகார் பெற்றார்கள் என்றால் சரிதான்"*** என்று சாட்சியமளித்துள்ளார்.

10.16 அ.சா.4 துளசிதாஸ் தனது சாட்சியத்தில், சந்திரன் என்பவர் மூலமாக தனக்கு எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் சுரேஷ்குமார் ஆகியோர்கள் அறிமுகமானவர்கள் என்றும், அப்போது, மேற்படி எதிரிகள் இருவரும் டெல்லியில் Kin Fin Service Private Ldt என்ற நிறுவனம் உள்ளதாகவும், அந்த நிறுவனத்திற்கு பணம் கட்டினால் தான் அவர்கள் இரிடியம் பொருளை காண்பிப்பார்கள் என்றும் கூறினார்கள் என்றும் அதன்படி தான் 07.09.2015ம் தேதியன்று மேற்படி டெல்லி நிறுவனத்திற்கு கோவை நஞ்சப்பா சாலையில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியில் உள்ள தனது கணக்கிலிருந்து Kin Fin Service Private Ldt நிறுவனத்தின் கணக்கிற்கு ரூ.25,00,000/- பண்தை அனுப்பினார் என்றும், பின்னாம், 09.09.2015ம் தேதியன்று மேற்படி எதிரிகள் இருவரும் இரிடியம் பொருளை கொடுப்பதற்காக தன்னையும் ஜெயக்குமாரையும் அன்னூர் மேட்டுப்பாளையம் சாலைக்கு வருமாறு கூறினார்கள் என்றும், தாங்கள் இருவரும் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றோம் என்றும், ஆனால், அங்கு அவர்கள் இருவரும் இல்லை என்றும், பின்னர், அ.சா.1, எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமார் மீது போலீசில் புகார் கொடுத்துள்ளதாக கேள்விப்பட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.4 அவரது குறுக்கு விசாரணையில், ***"07.09.2015ம் தேதியில் பண பரிவர்த்தனை செய்யும்போது என்னுடன் 1 மற்றும் 2 எதிரிகள் வந்தார்களா என்றால் வரவில்லை. ஜெயகுமார் பணம் அனுப்பும்போது அவருடன் யார் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் நான் எதிரியின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பவில்லை என்றால் சரிதான்*** என சாட்சியமளித்துள்ளார்.

10.17 அ.சா.7 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் நஞ்சப்பா ரோட்டில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியின் கிளை மேலாளராக பணியில் இருந்த போது கடந்த 2015 ஆம் வருடம், டிசம்பர் மாதம் ஆப்பக்கூடல் காவல் ஆய்வாளர் அவர்கள் துளசிதாஸ் என்பவர்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:13 +0530

தங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ள வங்கிக் கணக்கில் வரவு செலவு பட்டியலை கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன்படி தான் 2015ம் வருடம், செப்டம்பர் மாதத்திற்கான வரவு செலவு பட்டியலை அவரிடம் கொடுத்ததாகவும், கடனை 07.09.2015ம் தேதியன்று துளசிதாஸ் அவரது வங்கிக் கணக்கில் இருந்து Kian Fin Services என்ற வங்கி கணக்கு ரூ.20,00,000/- செலுத்தியுள்ளார் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.5 வங்கி வரவு செலவு பட்டியல் தான் தான் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.7 அவரது குறுக்கு விசாரணையில், ***"07.09.2015ம் தேதியில் அனுப்பப்பட்ட வங்கி பரிவர்த்தனையானது எந்த முறையில் அனுப்பப்பட்டது என்றால் RTGS முறையில் அனுப்பப்பட்டது"*** என சாட்சியமளித்துள்ளார்.

10.18 அ.சா.8 பானு தனது சாட்சியத்தில், தான் கோவை மாவட்டம் சிட்டி வங்கியில் பணியில் இருந்தபோது பல வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மேற்படி சிட்டி வங்கியில் கணக்கு வைத்துள்ள ஜெயக்குமார் என்பவரின் வங்கி வரவு செலவு பட்டியலை ஆப்பக்கூடல் போலீசார் வழக்கு தொடர்பாக மேற்படி வங்கியிடம் கேட்டார்கள் என்றும், அதன்படி கடந்த 01.01.2016ம் தேதியன்று 01.09.2015 முதல் 30.09.2015 வரையிலான ஜெயக்குமார் என்பவரின் வங்கி கணக்கில் நடைபெற்ற வரவு செலவு தொடர்பான வரவு செலவு பட்டியலை தங்களது வங்கி கடிதத்துடன் இணைத்து வழங்கினோம் என்றும், தாங்கள் வழங்கிய வங்கி வரவு செலவு பட்டியலின்படி 07.09.2015ம் தேதியன்று ஜெயக்குமாரின் வங்கிக் கணக்கில் இருந்து KIANFIN SERVICE என்ற வங்கி கணக்கிற்கு ரூ.25,00,000/- அனுப்பப்பட்டுள்ளதாகவும், வங்கி கடிதத்துடன் கூடிய வரவு செலவு பட்டியல் அ.சா.ஆ.6 குறியீடு செய்யப்பட்டும் பின்னர் போலீசாரின் வேண்டுகோளின் படி 07.04.2016ம் தேதியன்று DEBIT CARD 5536834200009706 என்ற எண் கொண்ட Debit Card மேற்படி ஜெயக்குமாரின் வங்கி கணக்கிற்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்று விபரம் தெரிவித்து அ.சா.ஆ.7 ஒரு கடிதம் வழங்கியதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:17 +0530

10.19 மேற்படி அ.சா.2 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை பரிசிலனை செய்கையில், டெல்லியில் உள்ள KIANFIN SERVICE நிறுவனத்திற்கு கடந்த 07.09.2015 தேதி புகார்தாரர் ஜெயக்குமார் வங்கிக்கணக்கிலிருந்து ரூ.25,00,000/- அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அன்றைய தினமே அ.சா.4 துளசிதாஸ் வங்கிக்கணக்கிலிருந்து ரூ.20,00,000/- அனுப்பப்பட்டுள்ளது என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆனால் 1 மற்றும் 2 எதிரிகள் சொல்லித்தான் பணம் அனுப்பப்பட்டதா, அந்த பணத்தை 1 மற்றும் 2 எதிரிகள் எடுத்தார்களா என பரிசிலனை செய்கையில், அ.சா.2க்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்பதும், அவரது அண்ணன் துளசிதாஸ் சொல்லித்தான் தெரியும் என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2ன் அண்ணன் பணம் அனுப்பியது குறித்தும் அவருக்கு நேரடியாக தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.2 கேள்விநிலை சாட்சியம் என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

10.20 மேலும் அ.சா3க்கும் ஜெயக்குமாருக்கும் எதிரிக்கும் உள்ள வரவு செலவு குறித்து நேரடியாக தெரியாது என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.3ம் கேள்வி நிலை சாட்சியம் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.4 பணம் அனுப்பும் போதும் அவர்களுடன் எதிரிகள் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆனால் அ.சா.4 தனது சாட்சியத்தில் எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரும் இரிடியம் பொருளை கொடுப்பதற்காக என்னையும் ஜெயக்குமாரையும் அன்னூர் மேட்டுப்பாளையத்திற்கு வருமாறு கூறினார்கள். ஆனால் அவர்கள் இருவரும் இல்லை என சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் நானும், ரவிக்குமார், துளசிதாஸ், ரங்கநாதன், சந்திரமோகனின் தந்தை ஆகியோர் எதிரிகள் கூறியவாறு மேட்டுப்பாளையம் காய்கறி மார்க்கெட் அருகில் சென்றோம். அங்கிருந்த எதிரிகள் வாங்க காட்டுகிறோம் என கூறி, சிறிது தூரம் எங்களை நடக்க வைத்து, எதிரிகள் அங்கிருந்து தப்பித்துவிட்டனர் என சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேட்டுப்பாளையம் போனதாக எந்தவித சாட்சியமும் அ.சா.3 மற்றும் அ.சா.4 அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. மேற்படி அ.சா.1 சாட்சியமும், அ.சா.2 முதல் 4



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:19 +0530

வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரணாக உள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

10.21 மேலும் இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 2015ம் வருடம் ஒரு நாள் தானும் செந்தில்குமார் என்பவரும் கீழ்வானையிலிருந்து அத்தாணி காலனிக்கு சென்று கொண்டிருந்தபோது, அத்தாணி தான்டி செம்புலிச்சாம்பாளையம் ரோட்டில் கூட்டமாக இருந்ததாகவும், அருகில் சென்று பார்த்தபோது, போலிசார் அங்கிருந்த 5 – 6 நபர்களை காட்டி இவர்கள் தான் மோசடி கும்பலைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் செய்த மோசடி தொடர்பாக இந்த இத்தில் விசாரித்து படம் வரைந்தும், பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் போடும் கேட்டுக்கொண்டதால், தானும், செந்தில்குமார் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், பின்னர், போலீசார் தங்கள் முன்னிலையில் மேற்படி நபர்கள் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.23,000/–த்தையும் ஒரு இண்டிகோ காரையும், கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றும், அதில் தாங்கள் இருவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறி சாட்சியம் அளித்துவிட்டு அதற்கு முற்றிலும் மாறாக தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு அல்லது மூன்று கையொப்பம் செய்திருப்பேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்துதான் காவலர்கள் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து செந்தில்குமார் என்பவரும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையை போலீசார் படித்து காட்டித்தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார்.

10.22 மற்றொரு பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.6 அரசுத்தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். அரசுத்தரப்பில் இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:22 +0530

10.23 இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.11 தேவேந்திரன் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

| |
|---|
| ***இந்த வழக்கின் வாதி ஜெயக்குமாருக்கும் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு தொடர்பு இருப்பது என்பதை காட்ட உரையாடல் விவரங்கள் எதுவும் நான் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Kianfin service Ltd நிறுவன வங்கி கணக்கிலிருந்து 1 மற்றும் 2ம் எதிரிகள் பணத்தை எங்கு வைத்து எடுத்தார்கள் என்பதை காட்ட எந்த ஒரு ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்*** என சாட்சியமளித்துள்ளார். |

10.24 மேற்படி சாட்சியத்திலிருந்து புகார்தாரர் மற்றும் துளசிதாஸ் Kianfin service Ltd நிறுவன வங்கி கணக்கிற்கு ரூ.45,00,000 அனுப்பியது வங்கி பரிவர்த்தனை மூலம் நிருபணம் செய்தாலும், புகார்தாரருக்கும், 1 மற்றும் 2எதிரிகளுக்கு தொடர்பு இருப்பதாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதும், Kianfin service Ltd நிறுவன வங்கி கணக்கிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகள் பணம் எடுத்தது தொடர்பாக எந்த ஒரு ஆவணமும் புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்படவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.5 தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் காவல் நிலையத்தில் வைத்து இரண்டு, மூன்று கையொப்பம் செய்திருப்பேன் என்றும், நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றும், என்ன வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என சாட்சியமளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. புகார்தாரர் புகாரில் எதிரிகளின் பெயர் எழுதி புகார் கொடுத்தாலும், புலன்விசாரனை அதிகாரி அந்த புகாரை புலன்விசாரனை செய்தே அந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவேண்டும். எதிரிதரப்பில் வாதிடுவது போல் புலன்விசாரனை அதிகாரி முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:24 +0530

10.25 மேலும், Kianfin service Ltd நிறுவனத்திற்கு பணம் அனுப்பியது வங்கி பரிவர்தனை மூலம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டது. மேற்படி Kianfin service Ltd யாருடையது என்பதும், அது எங்கு செயல்பட்டு வருகிறது என்பது குறித்து புலன்விசாரணை அதிகாரியால் முழுமையாக விசாரணை செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திகு தெரியவருகிறது. மேலும், அ.சா.10 புலன்விசாரணை அதிகாரியான ரமேஷ் என்பவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

***"எனது விசாரணையில் கியான் பின் சர்வீஸ் லிமிடெட் எங்கு உள்ளது என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால், அது சம்பந்தமாக 19.03.2015 ம் தேதி கரூர் வைசியா கிளை மேலாளருக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். மேற்படி கியான் பின் சர்வீஸ் டெல்லியில் உள்ளதாக தான் புகார்தாரர் தனது புகார் மற்றும் எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால், சரிதான்"*** என சாட்சியமளித்துள்ளார்.

10.26 மேலும், புலன்விசாரணை அதிகாரியான அ.சா.10யிடம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, கரூர் வைஸ்யா வங்கியில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தது தவிர கியான்பின் சர்வீஸ் தொடர்பாக எந்த புலன்விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல என்று சாட்சியமளித்துள்ளார். கியான்பின் சர்வீஸ் நிறுவனம் விசாரித்தது தொடர்பாக எந்த ஆவணம் வைத்துள்ளேன் என்றால் புகார்தாரர் ஜெயகுமார் மற்றும் சாட்சி துளசிதாஸ் ஆகியோர்களது வங்கி கணக்கிலிருந்து மேற்படி கியான்பின் சர்வீஸ் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட பணம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வங்கிகளில் இருந்து விவரம் பெற்றேன். அதனடிப்படையில் கியான்பின் சர்வீஸ் நிறுவனம் தொடர்பாக கரூர் வைஸ்யா வங்கியில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி அ.சா.10 புலன்விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில், பணம் அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் கியான்பின் சர்வீஸ் நிறுவனமானது டெல்லியைச் சார்ந்தது என்றால் புகார்தாரர் டெல்லியைச் சார்ந்தது என்றால் புகாரில் கூறியுள்ளார் என்றால் ஆனால் அது குறித்து எனக்கு எந்த விவரமும் வங்கியில் இருந்து கிடைக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:27 +0530

10.27 மேற்படி புலன்விசாரணை அதிகாரியான அ.சா.10 சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவர் கரூர் வைஸ்யா வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தது தவிர மேற்படி பணம் யாருடைய வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டது என்றும், அதை யார் பராமரித்து வருகிறார்கள் என்பது குறித்து எந்தவித புலன்விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.11 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், எனக்கு முன்பு புலன்விசாரணை அதிகாரிகள் யாரும் வங்கி மேலாளரை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். கோப்புகளில் அதுதொடர்பான ஆவணங்கள் எதுவும் இல்லை. மேலும், கியார்பின் சர்வீஸ் தொடர்பான எந்த ஆவணமும் கிடைக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.11 கியான்பின் சர்வீஸ் லிமிடெட் ICICI வங்கி கணக்கின் விவரங்கள் பெற்று மேலாளரை விசாரிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10.28 இந்த வழக்கானது 07.09.2015ம் தேதி கியான்பின் சர்வீஸ் நிறுவனத்திற்கு பணம் அனுப்பப்பட்டது 11.12.2015ம் தேதி புகார்தாரரால் புகார் கொடுக்கப்பட்டு புலன்விசாரணை அதிகாரியான ரமேஷ் 18.03.2016ம் தேதி வரை ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்துள்ளார் என்பதும், 19.03.2016ம் தேதிக்கு பின்னிட்டு எந்தவித விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், 2019ம் வருடம் டிசம்பர் மாதம் பணியில் சேர்ந்த அ.சா.11 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10.29 மேலும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் சரிவர அரசு தரப்பில் விசாரணை செய்யவில்லை என வாதிடப்பட்டது. மேற்படி வாதத்தினை கொண்டு பரிசீலனை செய்கையில், அ.சா.4 தனது சாட்சியத்தில், போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்கள். என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 செந்தில்குமாரும் தனது சாட்சியத்தில், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அ.சா.7 தனது சாட்சியத்தில், அதன்பின்னிட்டு நான்கு வருடம் கழித்துதான்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:30 +0530

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான் என சாட்சியமளித்திருப்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

மேலும், ***அ.சா.11 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "இந்த வழக்கின் வாதி ஜெயக்குமார் தனது புகாரில் kianfin Service Ltd நிறுவனத்தின் ICICI வங்கி கிளையில் பணம் அனுப்பப்பட்டதாக புகார் கொடுத்துள்ள நிலையில் மேற்படி ICICI வங்கி கணக்கின் விவரங்கள் எதுவும் பெற்று மற்றும் ICICIவங்கி கிளை மேலாளரை விசாரித்து வாக்குமூலம் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதை இந்த வழக்கிற்கு தேவை இல்லை என்பதால் நான் விசாரிக்கவில்லை, ஆவணம் எதுவும் பெறவில்லை"*** என சாட்சியமளித்துள்ளார்.

10.30 மேற்படி சாட்சியத்திலிருந்து *1* மற்றும் *2* எதிரிகளிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் கையாளுதல் அல்லது சொந்தப் பயன்பாட்டிற்கு மாற்றியதாக அரசு தரப்பில் சூழ்நிலை மற்றும் நேரடி சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

10.31 மேற்படி சாட்சியத்திலிருந்து *1* மற்றும் *2* எதிரிகள் புகார்தாரர் மற்றும் துளசிதா ஏமாற்றி, நேர்மையற்ற முறையில் சொத்து, பணம் அல்லது மதிப்புமிக்க பத்திரங்களைப் பறிக்கும் மோசடி செய்தார்கள் என்பதை அரசு தரப்பில் சூழ்நிலை மற்றும் நேரடி சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

Delhi Race Club (1940) Limited vs. State of Uttar Pradesh, (2024) 10 SCC 690 observed:

"*it is pertinent to mention that if it is the case of the complainant/respondent No.2 that the offence of criminal breach of trust as defined under Section 405 IPC, punishable under Section 406 IPC, is committed by the accused, then in the same breath it cannot be said that the accused has also committed the offence of cheating as defined in Section 415, punishable under Section 420 IPC.*"



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:33 +0530

எனவே எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவு 406, 420 சந்தேகத்திற்கிடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**11. <u>எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**இ.த.ச பிரிவு 294(b) பின்வருமாறு கூறுகிறது.**

(ஆ) ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசபாடல்கள் கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற அல்லது மொழிகிற எவராயினும் மூன்று மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

11.1 மேற்படி பிரிவின் படி எதிரிகள் அ.சா.1 மற்றும் சாட்சியுடன் வந்தவர்களை பார்த்து ஏன்டா தேவுடியா பசங்களா, கண்டாரோழி பசங்களா நீங்க என்ன பெரிய புடுங்கிகளா என்று சொல்லியும், நீ அனுப்பிய பணத்தையெல்லாம் தரமுடியாது என்று பொது இடத்தில் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளாரா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், எதிரிகள் இருவரும் தன்னை தேவடியா பையா, கண்டாரோழி பையா என தகாத வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 எதிரிகள் தகாத வார்தையால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் என்ன வார்த்தைகள் பயன்படுத்தினார் என்றும், அதனால், அருகில் உள்ளவர்களுக்கு அருவருக்கதக்க வகையில் இருந்தது என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிகள் யாரும் கூறவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் செம்புளிச்சாம்பாளையம், தேவர் தோட்டத்தில் உள்ள உரிமையாளர் மற்றும் வேலை ஆட்களை விசாரிக்கவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.1 சாட்சியம் இந்நீதிமன்றம் நம்பும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, 1 முதல் 7 வரையான எதிரிகளுக்கு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:35 +0530

எதிரான இதச.பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

**12. <u>எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 506(i)ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

**இ.த.ச பிரிவு 506(i) பின்வருமாறு கூறுகிறது.**

மரணத்தையோ அல்லது கடுமையான காயத்தையோ ஏற்படுத்துவதாக அச்சுறுத்தல் இருந்தால் குற்றத்தைச் செய்பவர் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவிற்கு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுவார்.

12.1 மேற்படி பிரிவின் படி பரிசீலனை செய்கையில், அ.சா.1 எங்க பணத்தை கொடுத்தயோ அங்க போய் கேளுங்க எங்ககிட்ட எதுக்கு கேட்கிறீங்க பணத்தை பத்தி கேட்டீங்கன்னா உயிரோட கோவை போய் சேரமாட்டீங்க என எதிரிகள் தங்களை மிரட்டினார்கள் என்றும் சாட்சியமளித்திருந்தாலும், அ.சா.ன் சாட்சியம் நம்பத்தகுந்த வகையில் இல்லை என இந்நீதிமன்றம் ஏற்கனவே முடிவு செய்துள்ளதால் அ.சா.1 சாட்சியம் அளித்திருந்தாலும் இ.த.ச.506ன் படி ஒரு வழக்கு நிரூபிக்கப்படவேண்டுமெனில் பொதுவாக ஒரு நபர் கொலை மிரட்டல் செய்யும்போது மற்றொரு நபர் அந்த கொலை மிரட்டல் செய்த நபரால் தனது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு அச்சம்பவ இடத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். வெறும் மிரட்டல் மட்டுமே குற்றமாக கருத முடியாது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Srinivasan Vs State rep by Sub inspector of police (2009 (4)MLJ (Crl) 1118) என்ற வழக்கில் பத்தி 11ல் ...

10.2 "In order to attract the ingredients of sec 506 of IPC, the intention of the accused must be to cause alarm to the victim. Mere expression of words without any intention to cause alarm would not suffice. To constitute an of fence U/S.506 IPC it must be shown that the person charged actually threatened another with injury to his personal reputation or property with an intention to cause alarm" என்று தீர்வு வழங்கியுள்ளது. மேற்படி தீர்ப்பின்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.18 18:13:39 +0530

அடிப்படையில் பார்க்கும்பொழுது எதிரிகள், தன்னை பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததால், சம்பவ இடத்தில் கொலை மிரட்டல் காரணமாக உடனடியாக தனக்கு உயிர் பயம் ஏற்பட்டது என்று அரசுத்தரப்பு சாட்சிகள் யாரும் கூறவில்லை. இ.த.ச 506 உட்கருத்தின்படி கவரப்படவில்லை. எனவே, 1 முதல் 7 வரையான எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்ற இ.த.ச.பிரிவு 506(i)ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகின்றது.

13. <u>எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 147ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>

**<u>இ.த.ச பிரிவு 147 பின்வருமாறு கூறுகிறது.</u>**

கலகம் விளைவித்தல் அல்லது கலவரம் செய்தலுக்கான (Rioting) தண்டனையை வரையறுக்கிறது. சட்டவிரோதக் கும்பலில் சேர்ந்து கலவரத்தில் ஈடுபடுபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படலாம்.

13.1 மேற்படி பிரிவின் படி கலகம் செய்யும் நோக்கத்துடன் சட்ட விரோதமாக 1 முதல் 7 வரையிலான எதிரிகள் ஒன்று சேர்ந்து வந்துள்ளார்களா என்பதை பரிசீலனை செய்கையில், மேற்படி இ.த.ச பிரிவுகள் 406, 420, 294(b) மற்றும் 506(i) நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாலும், அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 இருவரும் தங்களது சாட்சியத்தில், கலகம் செய்யும் நோக்கத்துடன் ஒன்றுகூடி வந்தார்கள் என்று எங்கும் குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில், அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியம் இந்நீதிமன்றம் நம்பும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரிகள் எதிரான இதச.பிரிவு 147ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:41 +0530

14. **முடிவாக,** இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 406, 420ன் கீழும், 1 முதல் 7 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 147ன் கீழும், 1 முதல் 7 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 294(b), 506(i)ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு எதிரிகள்யை குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரிகளை **கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 4, 5 எதிரிகள் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 4ம் எதிரி 16.06.2025ம் தேதியிலும், 5ம் எதிரி 06.02.2023ம் தேதியிலும் இறந்துவிட்டதால், அவர்கள் மீதான குற்றச்சாட்டு அற்றுவிட்டது.

15. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள, பி.ஆர்.எண்.603/2015ல் கண்டுள்ள அ.சா.பொ.1 பணம் ரூ.23,000/-மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையின் இருப்பின் அது முடிந்த பின்னர், மேற்படி தொகையில் உரிமையாளர் உரிமை கோரும் பட்சத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்மாறு உத்தரவிடப்படுகிறது. அ.சா.பொ.2 TN 37 BJ 2273 Swift Dzire காரை Cmp 353/2016, 20.01.2026 தேதி பிறப்பித்த உத்தரவின்படி வாகனத்தின் உரிமையாளர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அ.சா.பொ.3 TN 36 P 8428 என்ற Ford Fiesta காரை Cmp 85/2016, 12.01.2016ம் தேதி பிறப்பித்த உத்தரவின்படி வாகனத்தின் உரிமையாளர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். இவ்வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையின் இருப்பின் அது முடிந்த பின்னர், மேற்கண்ட நான்கு சக்கர வாகனங்களை நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

16. பதிவறை எழுத்தர் இந்த வழக்கின் தீர்ப்பு மற்றும் வழக்காவணங்களை முறையாக Index செய்து பதிவறையினுள் எவ்வித காலதாமதமுமின்றி கொண்டு சேர்க்க உத்தரவிடப்படுகிறது.



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:48 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:44 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ஜெயகுமார். |
| அ.சா.2 | திரு.ரவிகுமார். |
| அ.சா.3 | திரு.ரங்கநாதன். |
| அ.சா.4 | திரு.துளசிதாஸ். |
| அ.சா.5 | திரு.சத்தியசீலன். |
| அ.சா.6 | திரு.செந்தில்குமார். |
| அ.சா.7 | திரு.கிருஷ்ணன். |
| அ.சா.8 | திருமதி.பானு. |
| அ.சா.9 | திருமதி. அம்பிகா, காவல் உதவி ஆய்வாளர். |
| அ.சா.10 | திரு.ரமேஷ், காவல் ஆய்வாளர். |
| அ.சா.11 | திரு.தேவேந்திரன், காவல் ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.12.2015 | புகார் மனு. |
| அ.சா.ஆ.2 | 11.12.2015 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.3 | 11.12.2015 | கைப்பற்றுதல் மகஜர் (இண்டிகா கார்). |
| அ.சா.ஆ.4 | 11.12.2015 | கைப்பற்றுதல் மகஜர் (பணம் ரூ.23,000/-). |
| அ.சா.ஆ.5 | 05.01.2016 | வங்கி வரவு செலவு பட்டியல். |
| அ.சா.ஆ.6 | 01.01.2016 | வங்கி கடிதத்துடன் கூடிய வரவு செலவு பட்டியல். |
| அ.சா.ஆ.7 | 07.04.2016 | கடிதம். |
| அ.சா.ஆ.8 | 11.12.2015 | முதல் தகவல் அறிக்கை. |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.9 | 11.12.2015 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | 11.12.2015 | படிவம் – 91 |

<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்:</u> –

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | பணம் ரூ.23,000/– |
| அ.சா.பொ.2 | TN 37 BJ 2273 Swift Car |
| அ.சா.பொ.3 | TN 36 P 8428 சில்வர் கலர் Ford Carன் புகைப்படங்கள் – 5 எண்ணிக்கைகள். |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u> – இல்லை –

<u>குறிப்பு:</u>

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிகள்க்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.18 18:13:52 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**